# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 24 -04-2025

SC. 13/2021

அ.சா 9 – பெட்டிஇசாக்

2025 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24 ம் நாள் பெட்டிஇசாக் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பெட்டிஇசாக் | தந்தை பெயர் | எம்எம்ஐசக் |
| வயது | 54 | கிராமம் | எலக்ட்ரானிக் சிட்டி |
| மாநகரம் | பெங்களுரு | மாநிலம் | பெங்களுரு |

முதல் விசாரணை : –

நான் பெங்களுருவில் உள்ள செண்ட் ஜான்ஸ் மருத்துவ கல்லூரி முதுநிலை மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.12.2012 ம் தேதி அதிகாலை 2.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம் காமராசர் நகர் , JMJ இண்டஸ்ட்ரீசை சார்ந்த சுமார் 30 வயது மதிக்கத்தக்க சரவணன் என்ற நபரை ராமமூர்த்தி என்பவர் எங்கள் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து வந்தார். கடந்த 29.12.2012 ம் தேதி இரவு 12.00 மணியளவில் கிருஷ்ணகிரி மாவட்டம் காமராசர் நகர் , JMJ இண்டஸ்ட்ரீயில் வேலை பார்த்த போது தான் தாக்கப்பட்டதாக நோயாளி கூறினார். அவரை பரிசோதனை செய்ததில் , இடது பக்க மேல்பகுதி கழுத்தில் 5 செ.மீ X 3 செ.மீ அளவிலான வெட்டுக்காயம் இரத்தம் வளிந்த நிலையில் இருந்தது. அவர் உள்நோயாளியாக அனுமதித்து சிகிச்சை அளித்து காது , மூக்கு, தொண்டை மருத்துவ பிரிவிற்கு அனுப்பி சிகிச்சை அளிக்கப்பட்டது. அவர் எங்கள் மருத்துவமனையில் கடந்த 29.12.2012 முதல் 05.01.2013 வரை உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார். நோயாளிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்றும் , Fresh in Nature என்றும் காயச் சான்று வழங்கினேன். நான் வழங்கிய காயச் சான்று **அ.சா.ஆ 5** ஆகும் . இது

தொடர்பாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பொதுவாக நோயாளி ஒருவருக்கு நாங்கள் சிகிச்சை அளிப்பதற்கு முன்பு அவருக்கு முன்பு நோய் இருந்து ஏதாவது மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டதா , அவருக்கு உள்ள நோய்கள் பற்றிய விவரங்களை பற்றி கேட்போம் என்று சொன்னால் சரிதான். நோயாளி எங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கும் போது சுயநினைவுடனும் மற்றும் பேசும் திறன் உடன் இருந்தார் என்றால் சரிதான். நோயாளிக்கு ஏற்பட்ட வெட்டு காயம் ஒழுங்கற்ற ஆயுதத்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் கூர்மையான ஆயுதத்தால் தான் வெட்டுக் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்கிறார். கூர்மையான கண்ணாடி அல்லது இயந்திரத்தளவாடம் , மெட்டல் ராடு , மெட்டல் கம்பி ஆகியவற்றால் கழுத்தில் வெட்டுக் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் கூர்மையான ஆயுதமாக இருந்தால் தான் வெட்டுக் காயம் ஏற்படும் என்கிறார். கூர்மையான கண்ணாடியால் தான் வெட்டுக் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் , மெட்டல் ராடு , மெட்டல் கம்பி ஆகியவற்றால் வெட்டுக் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சாட்சி சொல்கிறார். நோயாளிக்கு பழைய தையல் போட்ட காயம் கழுத்தில் இருந்திருக்கும் பட்சத்தில் நோயாளி இன்டஸ்ட்ரீயில் வேலை செய்யும் போது , வேறு பொருள்கள் அதன் மீது பட்டு அந்த தையல் காயம் திறப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் , பழைய காயம் இருந்ததாக நோயாளி என்னிடம் தெரிவிக்கவில்லை என்றும் நான் காயத்தை பரிசோதித்த வகையில் அது பழைய காயம் அல்ல என்றும் சாட்சி சொல்கிறார். சுமார் 100 கிலோ எடையுள்ள நபர் ஒருவர் 2 கிலோ எடையுள்ள சிக்கில் ( Sickle) போன்ற ஆயுதத்தை வைத்து மற்றொரு நபரை கொல்ல வேண்டும் என்றும் , கழுத்தில் வீசும் போது அவருக்கு எந்த வகையான காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளதா என்றால் அந்த ஆயுதத்தை வீசக்கூடிய நபரின் வேகத்தையும் அதை தடுத்த நபரின் வேகத்தையும் பொறுத்து வெட்டுக் காயம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது

என்கிறார். அவ்வாறு வேகமாக ஆயுதத்தை கழுத்தில் வீசும் போது கழுத்து துண்டிக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்றால் கூர்மையான ஆயுதமாக இருந்தால் வாய்ப்பு உள்ளது உள்ளது என்கிறார்.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur